C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்



# மன்னா..

பொழிவு : 16 | DECEMBER 2024 | ஆகாரம் : 12



# Upcoming EVENTS

**07** Dec '24 — Saturday
6:30pm - 09:30pm
**Ecumenical Carol Service**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**08** Dec '24 — Sunday
6:30pm - 10:30pm
**Carol Rounds**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**14** Dec '24 — Saturday
6:30pm - 09:30pm
**Family Sing Song Service**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**21** Dec '24 — Saturday
6:30pm - 09:30pm
**Christmas Tree Service**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**25** Dec '24 — Wednesday
8:30pm - 10:30pm
**Christmas Service - 2024**
Offline / Online

**29** Dec '24 — Sunday
10:30am - 02:30pm
**Ministry Retreat**
Kanad hospital Majlis - Al Ain




**அன்பிற்கினியவர்களே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்.**

ஆண்டவரின் திருவருளால் கிடைக்கப்பெற்ற 2024 ஆம் ஆண்டில் 11 மாதங்களை நாம் நிறைவாக முடிக்கவும் 12ஆம் மாதமாம் டிசம்பர் மாதத்தைக் காணவும் செய்த கடவுளுக்கு முழு மனதுடன் குடும்பங்களாக நன்றி செலுத்துவோம்.

சாலமோன் அரசருக்கு பின்னர் இஸ்ரேல் நாடு வடநாடு, தென் நாடு என இரண்டாகப் பிரிந்தது. இயேசு கிறிஸ்து பிறப்பின் போது இஸ்ரேலை ரோமைப் பேரரசு ஆட்சி செய்தது. அப்போதைய ஆட்சியாளர் ஆக்டேவியன் என்ற அகஸ்டஸ் சீசர் மக்களை கணக்கெடுப்பு செய்தார். அதுவே முதலாம் குடி மதிப்பு (CENSUS) ஆகும். அந்தக் கட்டளைக்கு இணங்க பயணப்பட்டவரே யோசேப்பு. இவர் தமக்கு மனைவியாக நியமிக்கப்பட்ட, நிறைமாத கர்பினியான கன்னி மரியாளுடன் கலிலேயா நாட்டில் உள்ள நாசரேத்தில் இருந்து யூதேயா நாட்டில் உள்ள பெத்லகேம் என்னும் ஊருக்கு போனார். (லூக்கா 2:5)

**பெத்லகேம்:**

யூதேயா நாட்டிலே பெத்லகேம் என்பது ஓர் சிற்றூர். பெத்லகேம் என்பதற்கு அப்பத்தின் வீடு என்பது பொருள். உலகிற்கு உணவாகப் போகிற, ஜீவ அப்பமாகிய இயேசு பிறந்தது இந்த சிறிய ஊரின் மாட்டு கொட்டகையே. இது எளிமையான மக்கள் வாழ்ந்த ஊர். தாவீது அரசரின் பிறந்த ஊர், அரசராக திருப்பொழிவு பெற்ற ஊர். உலகையே ஆளப்போகிற ராஜாதி ராஜா (LORD OF LORDS) உன்னிடமிருந்து தோன்றுவார் என மீகா(5:2) தீர்க்கர் இறைவாக்கு உரைத்த இடம் இதுவே. யூதாவிலே மிகச் சிறிதாய் காணப்படுகிற உன்னிடம் இருந்தே அனைத்துலக அரசர் தோன்றுவார் என்பதுவே அந்த இறைவாக்கு.அது அப்படியே நிறைவேறிற்று. (மத்தேயு 2:6)

**கிறிஸ்து பிறந்த இரவு:**

உலகையே படைத்தவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு இம்மண்ணிலே பிறக்க செய்ய இடமின்றி, அங்கலா ய்த்த யோசேப்பும் பேறுகால கடும் வேதனையோடு தவித்த மரியாளும் அந்த இரவில் என்னவெலாம் எண்ணியிருப்பர். அலைந்து திரிந்த யோசேப்பும் மரியாளும் இறுதியில் தங்களுக்கு கிடைத்த மாட்டுக் கொட்டகையில் தஞ்சம் அடைந்த இரவு. மன்னாதி மன்னர் (KING OF KINGS) கோட்டையை அல்ல கொட்டகையே தமக்கு உகந்தது என்று முடிவு செய்திருந்தாரோ! அங்கே தான் மரியாள் இரட்சகரை பெற்றெடுத்தார். அந்த இரவு உலகிற்கே ஏன் நமக்கும் பகலவன் இயேசு என்பதை வெளிப்படுத்திய இரவு அது. (லுக்கா 2:7)


**தீவனத் தொட்டி:**

மாட்டுக் கொட்டகையில் பிறந்த குழந்தை இயேசுவை துணிகளில் சுற்றி தீவனத் தொட்டியில் (MANGER) கிடத்தினர். (லூக்கா 2:7) தீவனத் தொட்டி என்பது மாட்டிற்கு உணவளிக்கப்படும் தொட்டி ஆகும். இதுவே உங்களுக்கு "அடையாளம்" (லூக்கா 2:12) என்று தூதர்கள் மேய்ப்பர்களுக்கு கூறினர். பிறந்திருக்கும் குழந்தை உலகிற்கு உணவாகப் போகிறது என்பதுவே அந்த அடையாளம்.உலகை மீட்கத் தம்மை இழக்கப் போகிறவரே இந்த இயேசு என்னும் இரட்சகர். ஆண்டவர் இயேசுவுக்கு நம்மை அர்ப்பணிப்போமா?

**கொடைப் பண்டிகை:**

கிறிஸ்மஸ் என்பது கொடைப் பண்டிகை ஆகும். காப்ரியேல் தூதர் இயேசுவின் பிறப்புச் செய்தியை மரியாளுக்கு கொடுத்தார். மரியாள் தன் கருவறையையே இரட்சகர் இயேசு பிறக்கக் கொடுத்தார். யோசேப்பு மரியாளுக்கு பாதுகாப்பைக் கொடுத்தார். பிறப்பின் நற்செய்தியை மேய்ப்பர்களுக்கு தேவ தூதர்கள் கொடுத்தார்கள். மேய்ப்பர்கள் இரட்சகர் இயேசு பிறந்து விட்டார் என்ற செய்தியை எங்கும் கொடுத்தனர். (லூக்கா 2:17,18) சாஸ்திரிகள் தங்கள் பொக்கிஷங்களை கொடுத்தனர். (மத்தேயு 2:11) எல்லாவற்றிற்கும் மேலாக, ஆண்டவர் இயேசு கிறிஸ்து தம்மையே நமக்காக கொடுத்தார். (யோவான் 3:16)

பிரியமானவர்களே, இந்த கிறிஸ்மஸ் காலத்தில் மட்டுமல்ல, கிறிஸ்தவர்களான ஒவ்வொருவரும் வாழ்நாள் முழுவதும் எதைக் கொடுக்கிறோம்? என்பதை சிந்திப்போம். காரணம், கிறிஸ்மஸ் என்பது டிசம்பர் 25 மட்டுமல்ல மாறாக டிசம்பர் 25 = மத்தேயு 25:40 என்பதுவே. சிந்தித்து செயல்படுவோம். கிறிஸ்மஸ் பண்டிகையை பொருள் பொதிந்ததாக கொண்டாடுவோம். ஆண்டவர் இயேசு கிறிஸ்து நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக, ஆமென்.




இறைப்பணியில்,

ஆயர்.

Rev. S.Baktha Thiyagarajan





# யோசேப்பு

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் அனைவருக்கும் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு 2025-ன் நல்வாழ்த்துக்கள்.

- இந்த இனிய மாதத்தில் இயேசு கிறிஸ்து பிறப்பில் முக்கியப் பங்கு வகிப்பவர் யோசிப்பு.
- யூதர்களின் வழக்கம் திருமணத்திற்கு முன்பு ஒரு பெண் கருவுற்றிருந்தால் அவளை கல்லெறிந்துக் கொல்ல வேண்டும் என்ற மாறாத சட்டம் உண்டு.
- மரியாளின் கணவராக நிச்சயிக்கப்பட்டிருந்த யோசேப்பு ஒரு நீதிமான்.மரியாள் தன்னோடு கூடி வாழும் முன்பே கருவுற்றிருக்கிறார் என்பதைத் தெரிந்தும் கொன்று போடவில்லை. (உபா 22:20,21)
- மரியாளின் மீது இரக்கம் கொண்ட யோசசேப்பு அவரைத் தனியாக விலக்கி விட திட்டமிடுகின்றார்.(மத் 1:19)
- ஒருவர் மற்றவர் மீது இரக்கம் காட்டுகின்றபோது நேர்மையாளர் ஆகின்றார், அதைத்தான் யோசேப்பு செய்கின்றார்.
- வாழ்க்கைப் பயணத்தில் ஒருவர் மற்றவர் செய்யும் குறைகளை பொறுத்துக் கொண்டு,இரக்கம் காட்டி வாழ்ந்தால் மகிழ்ச்சியே நிலைத்திருக்கும்.
- மரியாளை தள்ளி விட வேண்டும் என்ற யோசனைக்கு இடையே கர்த்தருடைய தூதனின் வார்த்தைக்கு கீழ்படிந்தவராக தன்னை மாற்றிக் கொண்டவர் யோசேப்பு. (மத் 1:19,20)
- யோசேப்பு மரியாளுடன் இணைந்து கடவுளின் திட்டம் நிறைவேற ஒத்துழைத்தார். காரணம் அவர் கடவுளுக்கு அஞ்சியதே.(உபா4:10)

- யூதப் பாரம்பரியத்தில் குழந்தைக்குப் பெயரிடும் உரிமை அதன் தந்தைக்கே உரியது. அதுபோல மரியாளுக்குப் பிறக்கப் போகின்ற குழந்தைக்குப் பெயரிடும் உரிமையை கடவுள் யோசேப்புக்கு வழங்குகிறார்.(மத் 1:21)

- யோசேப்பு கடவுளின் கட்டளைப்படி மரியாளை மனைவியாக ஏற்றுக்கொண்டு, பிறந்த குழந்தைக்கு "இயேசு" என்று பெயரிட்டார்.(மத்1: 24,25)

- இவ்வுலகில் முன்மாதிரியான தந்தையாக யோசேப்பைக் கடவுள் முன் குறித்தார். மரியாளுக்கு பாதுகாப்பையும் கொடுத்தார் யோசேப்பு.

- ஏரோது குழந்தை இயேசுவைக் கொல்ல வகைத் தேடின போது, எகிப்துக்கு கடவுளின் திட்டப்படி பாதுகாப்புடன் மரியாளையும் குழந்தையையும் கொண்டு போனவர் யோசேப்பு. (மத் 2:14)

- பெத்லகேமில் தச்சு தொழில் செய்தவர் யோசேப்பு, கடவுளுக்கு பயந்து வாழ்ந்தவர் யோசேப்பு, கன்னி மரியாளுக்கும் குழந்தை இயேசுவுக்கும் மிகுந்த பாதுகாப்புக் கொடுத்தவர் யோசிப்பு, நீதிமானாக வாழ்ந்தவர் யோசேப்பு.(மத்1:19)

- இந்த கிறிஸ்மஸ் காலத்தில் நம் ஒவ்வொருவரின் தனிப்பட்ட வாழ்வையும் ஆய்ந்து அறிந்து பண்டிகையைக் கொண்டாடுவோம், இரட்சகராகிய இயேசு கிறிஸ்து நம்மை ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

இறைப்பணியில்,

ஆயரம்மா

**Mrs . P . Velanganni**



# செயலர் மடல்



கிருஸ்துவக்குள் பிரியமான திருச்சபை மக்களே, கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்,

இந்த ஆண்டிலும் 2024—ஆம் ஆண்டு ஆரம்பம் முதல் முடிவு மட்டும் கர்த்தர் நம்மை பாதுகாத்து வழிநடத்தி வந்தார், அல்லேலூயா கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்.

இந்த டிசம்பர் மாதத்தில் கிறிஸ்து பிறப்பு பண்டிகை கொண்டாட இருக்கிறோம் அதற்காக நம் ஆலயத்தில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்விலும், ஆராதனைகளும் திருச்சபையாக கலந்து கொள்வோம். இயேசு கிறிஸ்து பிறப்பின் செய்தியை மக்களுக்கு அறிவித்து ஒருவரை ஒருவர் வாழ்த்துவோம் வாருங்கள்.

**உங்கள் சிந்தனைக்கு**

## ஒளியாக வந்த கிறிஸ்து

யோவான் 8:12; 9:5; 12:46 நான் உலகத்துக்கு ஒளியாயிருக்கிறேன் தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனுஷன் இருந்தான் அவன் பெயர் யோவான் அவன் தன்னால் எல்லாரும் விசுவாசிக்கும் படி அந்த ஒளியை குறித்து சாட்சி கொடுக்க சாட்சையாய் வந்தான் அவன் அந்த ஒளியல்ல அந்த ஒளியை குறித்து சாட்சி கொடுக்கவே வந்திருந்தான் உலகத்திலேவந்து எந்த மனுஷனையும் பிரகாசிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி! விசுவாசிப்போம் அந்த ஒளியை, யோவான் 1:9 மெய்யான ஒளி; லூக்கா 2:30 பிரகாசிக்கிற ஒளி; 1பேதுரு 2:9 ஆச்சரியமான ஒளி; 2கொரிந்தியர் 4:6 அறிவாகிய ஒளி; ஏசாயா 10:17 இஸ்ரவேலின் ஒளி.

### 1. பிரகாசிக்கிற ஒளி

லூக்கா—2:30(25—33) (சிமியோன்) புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளி யாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும், தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது. யோவான்:1:5 அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை. இந்த ஒளியை பற்றி

கொண்டால் உன்னையும் பிரகாசிக்கச் செய்யும் உன் குடும்பத்தையும் பிரகாசிக்க செய்யும், ஒளியான வாழ்வுநித்திய வாழ்வு.

## 2. பிரகாசிப்பிக்கிற ஒளி

யோவான் 1:9 (1—9) உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப் பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி. சங்கீதம் 118:27 கர்த்தர் நம்மைப் பிரகாசிப்பிக்கிற தேவனாயிருக்கிறார்.

## 3. பிரதிபலிக்கிற ஒளி

ஏசாயா 9:2 இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைச் கண்டார்கள்; மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின் மேல் வெளிச்சம் பிரகாசித்தது.

மத்தேயு 5:14—16 நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள். ஏசாயா 60:1—3 எழும்பி பிரகாசி; உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது: உன்மேல் கர்த்தர் உதிப்பார்,

என்னை நேசிக்கின்ற ஒளியே
என் மேல் விழுந்த ஒளியே
என்னை பிரகாசிக்கிற ஒளியே

இருளில் இருந்த என்னை, குன்றின் மேல் ஏற்றப்பட்ட விளக்காகபிரகாசிக்க என்னை உம்மிடத்தில் ஒப்புவிக்கிறேன் ஏற்றுக் கொள்ளும், ஆமென்.

**“நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.”**

—மத்தேயு 5:14—16

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.
கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக

**இறைப் பணியில்**

Mr. Santhosh Kumar

திருச்சபைச் செயலர்



# நமக்கு வைக்கபட்டு இருக்கிற சுதந்திரம்

பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும்கிருபையும் சமாதானம் உண்டாவதாக பிதாவாகிய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினால் கீழ்ப்படிதலுக்கும் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தெளிக்கப்படுத்தலுக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட அனைவருக்கும் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக

நம்முடையவிசுவாசம். தேவனுடைய பலத்தினால் காக்கப்பட்டு இருக்கிறது —ரோமர்:1.16 இப்படியாககூறுகிறது கிறிஸ்துவின் சுவிஷேசத்தை குறித்து நான் வெட்கப்படேன் முன்பு யூதராலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவன் எவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு தேவ பலனாய் இருக்கிறது. ஆதலால் நம்முடனே ஆண்டவர் துவக்கின விலையேறப்பட்ட விசுவாசமானது சோதிக்கப்பட்டு. இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது நமக்கு புகழ்ச்சியும் , கனமும், மகிமையும் உண்டாக காணப்படும். ஏனென்றால் நாம் அவரை காணாமல் இருந்தும் அவரிடத்தில் அன்பு கூறுகிறோம்அவரை தரிசியாமல் இருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து. விலையேறபெற்றதான விசுவாசத்தின் பெலனாகிய ஆத்தும இரட்சிப்பை அடைகிறோம். அந்த விசுவாசத்தின் வார்த்தை. (ரோமர் 9.10) என்னவென்றால் கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று உன் இருதயத்தில் விசுவாசித்தால் இரட்சிக்கபடுவாய். நீதி உண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும் இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும். நாம் இரட்சிப்பு அடைய வேண்டுமானால் கிறிஸ்துவே இரட்சகர் என்பதை நம் வாயினால் அறிக்கை பண்ணவேண்டும் இதுதான் நமக்கு பிதாவானவர். உலகத் தோற்றத்திற்கு முன்னே கொடுத்திருக்கிற விலையேற்றப்பட்ட கிருபை . இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலேநம்மை மறுபடியும் உயிர்ப்பித்திருக்கிறார் அந்த சுதந்திரம் நமக்கு பரலோகத்தில் வைக்கப்பட்டு இருக்கிறது. ஆகையால் கிறிஸ்து வெளிப்படும் போது நமக்கு அளிக்கப்படும் கிருபையின் மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயும், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயயும் இருக்க வேண்டும். நம்மை அழைத்தவர்பரிசுத்தராய் இருக்கிறதுபோல நாம் அனைவரும் நம்முடைய நடக்கை எல்லாவற்றிலேயும் பரிசுத்தராக இருக்க வேண்டும்.

அன்றியும்பட்சபாதம் இல்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவரை நாம் அனைவரும் பிதாவாக தொழுது கொண்டு வருகிறபடியால் இந்த உலகத்தில் இருக்கின்ற நாள் வரைக்கும் நாம் பயத்துடனே நடந்து கொள்ள வேண்டும். ஏனெனில் குற்றமில்லாத ஆட்டுக்குட்டியாகிய இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட்டு இருக்கிறோம். பாவம் அறியாத அவர் பாவமானார் தம்முடைய சொந்த குமாரனென்றும் பாராமல் ஒப்புக்கொடுத்து இவ்வளவாய் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து இருக்கிறார் .

கிறிஸ்து நமக்காக பிறந்ததை வருஷந்தோறும் கொண்டாடுகிற நாம்,முடிவு பரியந்தம் நிலைத்திருந்து கடைசி நாட்களில் வெளிப்பட ஆயத்தமாகப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு நம்மை ஆயத்தப்படுத்திகொள்ள வேண்டும். கிறிஸ்துவானவர் வெளிப்படும் போது அவருடைய மகிமைக்கு புகழ்ச்சியாக நம் அனைவரையும் கூட்டி சேர்க்கப்போகிறார் இவ்வளவாய் தேவன் அவருடைய அன்பை வெளிப்படுத்தியிருக்கிறார். விலைமதியாத சுதந்திரம் நமக்கு பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அதை நோக்கி பயணிப்போம். ஆண்டவருடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. ஆமென்

ARTICLE BY

## MR. HERCHIL HARISH

MEN'S FELLOWSHIP

# NOVEMBER WINNERS

## KIDS COLORING

Smyrna Syntyche

Efrain

Shaana Liliya

Jesil Bernice

Hazel Hartlyn

## FIND THE WAY

Jasil Bernice, Hazel Hartlyn, Elfina

## WORD SEARCH

Jasil Bernice, Hazel Hartlyn, Elfina

## CROSS WORDS

Jason Eric




அன்பானலர்களே, இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

யார் இந்த சூனேமியாள்?
வேத்த்திலுருந்து நாம் அவளிடம் என்னக் கற்றுக்கொள்கிறோம்? என்பதை சற்று சிந்திப்போம்.

## பகுத்தறிகிற ஆவியின் வரம் உள்ள ஸ்திரீ

எலிசா என்கிற ஒரு தீர்க்கதரிசியான தேவ மனிதர், ஊழியத்திற்க்காக சூனேம் ஊருக்கு சென்று வருவது வழக்கம். எலிசா வருகிற போதெல்லாம் தன்னிடத்தில் வந்து போஜனம் பண்ணும் படி இந்த ஸ்திரீ அவரை வருந்திக் கேட்பாள். எலிசாவும் அவள் வீட்டில் தங்கி, போஜனம் பண்ணுவார். அவள் தன் புருஷனை நோக்கி, நம்மிடத்தில் வந்து போகிற தேவனுடைய மனுஷனாகிய இவர் பரிசுத்தவான் என்று குறிப்பிடுகிறாள். இப்படி ஒரு பகுத்தறியும் ஞானத்தை தேவன் அவளுக்கு கொடுத்திருந்தார். அப்படிப்பட்ட ஞானம் நமக்கும் நிச்சயம் தேவை. அந்த ஊரில் அவள் நல்ல பெண்மணியாக வாழ்ந்திருக்க வேண்டும். கணவனுக்குக் கீழ்ப்படிந்து, தேவனுக்கும், மக்களுக்கும் பிரியமான ஸ்திரீ என்று சாட்சி பெற்று வாழ்ந்திருக்க வேண்டும். இந்த சூனேமியாளை பற்றி 2 இராஜக்கள் 4 ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## உற்சாகமாய் ஊழியத்திற்கு கொடுக்கிறவள்

எலிசாவிற்காக தன் கணவரிடம் அனுமதி பெற்று தன் வீட்டை உற்சாகமாய் திறந்து கொடுக்கிறாள். தனது வீட்டின்மேல் ஒரு அறைவீட்டைக் கட்டி, அதில் அவருக்கு ஒரு கட்டில், மேஜை, நாற்காலி, குத்து விளக்கு என்று சகல வசதியும் செய்து கொடுத்தாள். (2 இராஜக்கள் 4:10) அவள் அந்த ஊரில் வசதியாக வாழ்ந்தவளாய் இருந்தாலும், தேவனுடைய ஊழியத்திற்கு உற்சாகமாய் கொடுக்கிறவளாய் இருந்தாள். பிரியமானவர்களே, இன்று நாம் எத்தனை பேர் ஊழியத்திற்கு உற்சாகமாய் கொடுக்கிறோம் என்று சிந்திப்போமா?

## ஊழியக்காரரை உபசரித்தல்

எலிசா தீர்க்கதரிசிக்கு வீட்டை திறந்து கொடுத்ததுமல்லாமல் அவர் ஊழியத்திற்காக அந்த ஊருக்கு வருகிற போதெல்லாம், அவள் வீட்டில் தங்கவும், போஜனம் பண்ணவும் மிகவும் வருந்தி கேட்டுக்கொண்டாள். (2 இராஜக்கள் 4:8) அவள் வருந்தி கேட்டுக்கொண்டதால், எலிசா அங்கே தங்கியிருக்கலாம். அன்பானவர்களே, நாமும் நம்மால் முடிந்த வரை ஊழியக்காரரை உபசரிக்க முற்படுவோமா?

## தன குறைகளை தேவனிடம் மாத்திரமே சொல்லுதல்

சலக்கரணையோடு எங்களை விசாரிக்கிற உனக்கு என்ன வேண்டும் என கேட்கப்பட்ட போது, என் ஜனத்தின் நடுவே நான் சுகமாய் குடியிருக்கிறேன் என்று கூறினாள். (2 இராஜக்கள் 4:13) அவள் அப்படி கூறியிருந்தாலும் அவளுக்கு ஒரு குறை இருந்தது. வெகு காலமாய் அவளுக்கு பிள்ளை இல்லாதிருந்தது. ஆனால் அவள், அதை ஊழியக்கார்ருக்கு சொல்லவில்லை. தேவனுக்கு மாத்திரமே சொல்லி ஜெபித்திருப்பாள். எலிசா அவள் தேவையை அறிந்து, அவளுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்று வாக்குறுதி அளிக்கிறார். ஏற்ற காலத்தில் ஒரு ஆண்குழந்தையை பெற்றெடுக்கிறாள். நாமும் கூட நம் தேவைகளை முதலில் தேவனிடம் சொல்லி ஜெபிப்பவர்களாய் இருப்போமா?


## விசுவாசத்தில் தேறின மகள்

சூனேமியாளின் மகன் மரித்துப்போன சூழ்நிலையில், அவள் விசுவாசத்தோடு, மரித்துப்போனப் பிள்ளையை கட்டிலில் கிடத்தி, அறை வீட்டைப் பூட்டி, துரிதமாய் எலிசாவிடம் சென்று முறையிட்டாள். நானா உம்மிடத்தில் மிள்ளையை கேட்டேன்? என்று அவள் அழுத போது எலிசா வேகமாய் பிள்ளையினிடத்தில் வந்து அவனை உயிரோடு எழுப்பினார். (2இராஜாக்கள் 4:28) சூனேமியாள் உலக மனிதரை நம்பி போகாமல் தேவனை மட்டுமே விசுவாசித்து, தன் பிள்ளையை திரும்பப் பெற்றுக் கொண்டாள். நாமும் தேவன் மேல் நம் விசுவாசத்தை வளர்த்துக் கொள்வோமா?

## சூனேமியாளிடமிருந்து கற்றுக் கொண்டவை

- ஊழியத்திற்காக உற்சாகமாய் கொடுத்தாள்
- ஊழியக்காரரை அன்போடு உபசரித்தாள்
- குறைகளை தேவனிடத்தில் மட்டுமே சொல்லி
- ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டாள்.
- விசுவாசத்தால் மரித்த குழந்தையை உயிரோடே மீட்டுக்கொண்டள்.

பிரியமானவர்களே, நம்மால் முடிந்த வரை ஊழியத்திற்தாக உற்சாகமாய் கொடுப்போம். ஊழியத்தை தாங்குவோம். தேவனுடைய ராஜ்யத்தைக் கட்டுவோம். தேவன் தாமே நம்மெல்லாரையும் ஆசீர்வதிப்பாராக.... ஆமென்.




Article by

**MRS. JENIFER PAUL**

WOMEN'S Fellowship







## HARVEST FESTIVAL - 2024










## DECEMBER '24 - QUESTIONS

1. அம்னோனை விருந்துக்கு அழைத்துக் கொன்றது யார்?
2. தீக்கொளுத்திப்போட்ட நிலம் யாருடையது?
3. தன் தலையின் மேல் புழுதியைப் போட்டுக் கொண்டவன் யார்?
4. தாவீதை தூஷித்தவன் யார்?
5. தன் யோசனைப்படி செய்யாததால் தற்கொலை செய்து கொண்டது யார்?
6. குமாரன் இல்லை என்று தனக்கு தூணை நிறுத்தியது யார்?
7. தாவீதை பராமரித்தக் கிழவன் யார்?
8. பெண்ணின் புத்தியான பேச்சினால் தலை வெட்டப்பட்டது யார்?
9. தாவீதை வெட்ட வேண்டும் என்று இருந்தவன் யார்?
10. வில்லை வளைக்கப் பயிற்றுவிக்கப்பட்டவர் யார்?
11. மூன்று சிங்கங்களைக் கொன்றவன் யார்?
12. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடைபெற்ற காலம் எவ்வளவு?

## நவம்பர்-2024 மாத வினாவிற்கான விடைகள்

*1. 2சாமு1:23, 2. 2சாமு2:18, 3. 2சாமு3:29, 4. 2சாமு4:12, 5. 2சாமு5:24, 6. 2சாமு6:11, 7. 2சாமு7:18, 8. 2சாமு8:16, 9. 2சாமு9:12, 10. 2சாமு10:13, 11. 2சாமு11:21, 12. 2சாமு12:25*

## நவம்பர்-2024 மாத வினாவிற்கான விடைகள் எழுதியவர்கள்

திருமதி.பிப்ளின் நெல்சன்

திருமதி.ராதிகா செல்வக்குமார்

திருமதி.ஜோனிஸ் ஹெர்சல்


ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

YOUR NAME / BIBLE QUIZ / OCTOBER'24 /
SEND TO: CSITCALAIN@GMAIL.COM
056 766 8348

Name:


Date:

Kids Coloring



# Find the Way

Name : ........................................................................





Joseph and Mary went on a long journey from the town of Nazareth to the town of Bethlehem.

(Luke 2:1-5)

# WORD SEARCH



# THE BIRTH OF JESUS



Discover the hidden words.

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Q | S | H | H | S | S | S | R | R | G | C | S | K | C | K |
| J | U | F | A | C | B | T | L | B | A | L | U | V | A | Y |
| L | S | C | I | A | A | A | H | R | E | D | I | Y | K | P |
| H | E | R | S | N | Q | R | P | G | C | K | O | B | P | G |
| J | J | B | S | K | Q | E | N | J | S | E | Z | R | D | J |
| D | M | W | E | T | N | A | O | H | O | T | N | Q | E | E |
| Q | Z | T | M | T | I | P | E | S | X | S | G | S | H | H |
| U | N | E | E | H | U | P | V | K | I | U | E | M | U | U |
| X | B | R | D | K | H | J | Z | P | K | L | A | P | S | S |
| U | A | H | H | E | V | B | A | B | Y | R | A | J | H | Z |
| C | D | J | R | H | Q | O | N | A | Y | F | T | D | U | H |
| Q | J | D | E | L | B | A | T | S | T | R | U | E | P | S |
| F | S | P | P | U | V | K | H | V | Z | R | W | G | J | W |
| M | C | X | D | F | M | K | W | N | D | S | I | E | J | Z |
| V | W | D | K | U | S | N | T | N | N | I | S | S | R | X |

**Word Bank**

MESSIAH
JESUS
BABY
ANGELS
SHEPHERDS
HEROD
CENSUS
STABLE
MARY
JOSEPH
CARPENTER
STAR

Name : ..............................................................................

# CROSS WORDS


Name : ..........................................................................

## The Birth of Jesus

And she brought forth her firstborn son, and wrapped him in swaddling clothes, and laid him in a manger; because there was no room for them in the inn. Luke 2:7 (KJV)

Puzzle is based on Luke 2:1-20






### ACROSS

1. An infant or very young child
5. The place where Mary laid the baby Jesus
6. A person who takes care of sheep
7. The city where Jesus was born

### DOWN

2. Heavenly being that told the shepherds about Jesus' birth
3. The savior of the world
4. The earthly father of Jesus
5. The mother of Jesus

| | | | |
|---|---|---|---|
| JOSEPH | ANGEL | BETHLEHEM | BABY |
| MARY | SHEPHERD | JESUS | MANGER |

# DECEMBER - 2024

| | |
|---|---|
| 01-DECEMBER | Master. Jeffry Immanuel S/o Mr. Joel Ranjith Kumar |
| 01-DECEMBER | Mrs. Kalyani Sankaran |
| 01-DECEMBER | Master. Faylin Joanna Prince D/o Mr. Prince Pitchiah |
| 02-DECEMBER | Ms. Angelin Sophia Nelson D/o Mr. Nelson Sopitha Raj. |
| 04-DECEMBER | Master. Chris Gabriel S/o Mr. Daniel Durai Singh |
| 10-DECEMBER | Ms. Althea Zerlin D/o Mr. Glymond Fenzer |
| 11-DECEMBER | Master. Aaren Christo S/o Mr. Prem Jenifer |
| 12-DECEMBER | Mr. Jayapradheep Christopher |
| 12-DECEMBER | Mrs. Maheswary Velu Yamuna |
| 13-DECEMBER | Master. Richard S/o Mr. Ravindra |
| 17-DECEMBER | Mrs. Sweetlin Abi |
| 17-DECEMBER | Ms. J. Johana D/o Mr. Jose Selva Kumar |
| 17-DECEMBER | Mrs. J. Babi Kutti |
| 18-DECEMBER | Mr. V. Arun Kumar |
| 18-DECEMBER | Ms. Ben Jonathan S/o Mr. Balaji Ramaiyan. |
| 24-DECEMBER | Master. Joyan Castro S/o Mr. Prem Jenifer. A |
| 25-DECEMBER | Master. Haryter Samuel S/o Mr. Havin Heba |
| 25-DECEMBER | Mr. Balaji Ramaiyan |
| 25-DECEMBER | Mr. C. Rajesh Anbu |
| 25-DECEMBER | Ms. Gabriella D/o Mr. Suresh Babu |
| 26-DECEMBER | Mr. Jefrin Israel |
| 27-DECEMBER | Master. Shelbino Paul S/o Mr. Melbin Paul |
| 28-DECEMBER | Mrs. Prasana |
| 28-DECEMBER | Mrs. Rena Ivelet Jasmine |
| 31-DECEMBER | Ms. M. Angeline Shally |



# DECEMBER *Wedding* ANNIVERSARY

**04- DEC**
Mr. John Prabakaran
&
Mrs. B. Swetha

**08- DEC**
Mr. Alvin Kumar Asirmanns
&
Mrs. M. Subha Alvin

**09- DEC**
Mr. I. Berlin Jose
&
Mrs. Godshilin

**13- DEC**
Mr. Timotheus Dill Suresh
&
Mrs. Sathvikalakshmi

**13- DEC**
Mr. S. Selva Ezhil
&
Mrs. K.S. Monsy

**14- DEC**
Mr. Thiyagu Murugaraj
&
Mrs. Jennifer

**20- DEC**
Mr. M. Santhosh Kumar
&
Mrs. Helena Santhosh

**21- DEC**
Mr. G. Verslin Benny
&
Mrs. S. Divya Sherrin

**26- DEC**
Mr. Stephen Pradeepkumar
&
Mrs. Hephzibah

**27- DEC**
Mr. Selvistor Solomon
&
Mrs. Manjushah

**28- DEC**
Mr. Joel Ranjith Kumar
&
Mrs. Shafeena

**28- DEC**
Mr. Appavoo Nicson
&
Mrs. Vimala Nicson




| | |
|---|---|
| 28- DEC | Mr. Herchil Harish & Mrs. Blessy Grace Jonish |
| 29- DEC | Mr. Derin Joy & Mrs. Fanny Esther |
| 29- DEC | Mr. M. Nesamony & Mrs. Hepsi Bai Nesamony |
| 29- DEC | Mr. T. Robert Wilson & Mrs. Aji Kumari |
| 30- DEC | Mr. Joel Singh Edison & Mrs. Ramya Joel |

*"Two are better than one, because they have a good return for their labor: If either of them falls down, one can help the other up."*

-Ecclesiastes 4:9-10

Wish you many more happy returns of the day God bless you all





## CHRISTMAS CAROL SERVICE



































## CBS CHRISTMAS SERVICE





# Upcoming EVENTS

| | | |
|---|---|---|
| **31** Dec '24 | 6:00am - 06:00pm<br>**12-HRS CHAIN PRAYER**<br>Evangelical Church Campus<br>Kanad hospital - Al Ain | Tuesday |
| **31** Dec '24 | 10:30pm - 01:00am<br>**YEAR END 24 – NEW YEAR 25 SERVICE**<br>(online/ offline) | Tuesday |
| **04** Jan '25 | 6:30pm - 07:15pm<br>**CBS Start Date Term 1**<br>Evangelical Church Campus<br>Kanad hospital - Al Ain | Saturday |
| **12** Jan '25 | 6:30am - 05:30pm<br>**Sports Meet**<br>C.S.I. TAMIL PARISH AL AIN, UAE | Sunday |
| **02** Feb '25 | 4:30am - 10:30pm<br>**Church Picnic**<br>C.S.I. TAMIL PARISH AL AIN, UAE | Sunday |

*Merry Christmas*

# Merry CHRISTMAS

## AND A HAPPY NEW YEAR

WISHING YOU A SEASON OF LOVE,
PEACE, AND HAPPINESS.


**EDITOR**

**THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE**
**TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348**

**Email: csitcalain@gmail.com**
**Web: csitamilparishalain.org**



**STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY**